**பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் - மேலதிக செயலாளர் (தாபனம்) பதவி**

பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் வெற்றிடமாகவுள்ள மேலதிக செயலாளர் (தாபனம்) பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தின் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. குறித்த பதவிக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் தமது சேவைக் காலத்தினுள் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படாத அல்லது ஏதேனுமொரு குற்றம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு தற்போது/எதிர்காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படாத உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும். மேலும், பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள் மற்றும் ஏனைய சட்டவாக்கங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் குறித்து நன்கு பரிச்சயமுடைய உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேவை நிலையமொன்றில் சேவையாற்றியிருத்தல் விரும்பத்தக்கது.

03. அதற்கமைய, மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் தமது சேவை விபரங்களையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையை **2025.12.06** ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(i) பதிவுத் தபால் - சுயவிபரக்கோவையை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மேலதிக செயலாளர் (தாபனம்) பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்,<br>
பகிரங்க சேவை ஆணைக்குழு,<br>
1200/9, ரஜமல்வத்த வீதி,<br>
பத்தரமுல்ல.

(ii) மின்னஞ்சல் - info@psc.gov.lk

விடயம் (Subject) "மேலதிக செயலாளர் (தாபனம்) பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடுக.

செயலாளர்,<br>
பகிரங்க சேவை ஆணைக்குழு,<br>
1200/9, ரஜமல்வத்த வீதி,<br>
பத்தரமுல்ல.<br>
2025.11.06